# விடியல்

THE DAWN மாத இதழ்

பொழுது - 94
பிப்ரவரி 2017



## உலக விவசாயிகள் தினம்




SUN Printer தி.கோடு. 97500 20222

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA
Knowledge is Power

விடியல் மாத இதழ் (தனிச்சுற்றுக்கு மட்டும்)
வெளியீடு: தமிழ்த்துறை
கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு - 637 215, தமிழ்நாடு, இந்தியா.
*fb* : facebook.com/ksrcasthamizh.vidiyal
*Blog* : *ksrcasthamizh.blogspot.in*
*Email* : *vidiyalmagazhine@gmail.com*
*Website* : *ksrcas.edu*

# விடியல்

**The Dawn**

இதழ்-94, பிப்ரவரி-2017



**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**

கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**

**முனைவர் சி.ரா. சுரேஷ்**

துறைத்தலைவர்

**இணையாசிரியர்**

**திரு. செ. தங்கராஜ்**

**ஆசிரியர் குழு**

திரு .வீரா. முருகானந்தம்
முனைவர் த. கண்ணன்
திருமதி. சு. சாந்தி
திரு. ப. ராஜேஷ்
முனைவர் து. சரஸ்வதி
முனைவர் பா. ராஜேஷ்
முனைவர் கோ. இரவிச்சந்திரன்
முனைவர் ம. லோகேஷ்வரன்
திரு. மு. சதீஸ்குமார்
முனைவர் சு. முப்பிடாதி
முனைவர் ப. பிரதீபா
திரு. மு. சத்தியராஜ்
முனைவர் ப. சிலம்பரசன்
திரு. ந. சரவணன்


## தலையங்கம்

## உரிமை பறிபோகிறதா..!

இயற்கை நமக்கு அளித்த வரப் பிரசாதம் மண் வளம். இந்த மண்ணில் ஏராளமான ஆற்றல்கள் புதையுண்டு கிடக்கின்றன. ஆம் இயற்கையின் சீற்றங்களுக்கு ஆளாகும் புவியில் உள்ள மரம், செடி, கொடிகள் மண்ணில் புதையுண்டு வெப்பம், குளிர்ச்சி, அழுத்தம் போன்ற பல்வேறு காரணிகளால் வேதியியல் மாற்றம் நிகழ்ந்து இன்று மீத்தேன், நிலக்கரியாக மாறியுள்ளது.

தமிழகத்தின் நெய்வேலியில் ஏற்கனவே நிலக்கரி எடுக்கப்பட்டாலும் தஞ்சை, திருவாரூர் பகுதி மன்னார்குடி ஆகிய பகுதிகளில் மீத்தேன் எரிவாயு, நிலக்கரி இருப்பது கண்டறியப்பட்டு அதை எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது நடுவண் அரசு.


© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)



வெளியீடு:

**தமிழ்த்துறை**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி** (தன்னாட்சி)

**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal

**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com

**Website:** ksrcas.edu


KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA Knowledge is Power



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publish

உலகம் முழுவதும் பெட்ரோல், டீசலுக்கு மாற்று எரிசக்தியாக எத்தனால், பயோ டீசல், இயற்கை எரிவாயுவான மீத்தேன், புரோபேன், ஹைட்ரஜன் ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட்டது. பெட்ரோல், டீசலை விட இந்த இயற்கை எரிவாயுவான மீத்தேன் விலைக்குறைவு என்பதாலும் சுற்றுச்சூழலுக்கு குறைந்த மாசு ஏற்படுவதாலும் இத்திடத்தைச் செயல்படுத்த 2009 ஆம் ஆண்டு முதல் நடுவண் அரசுகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன.

கச்சா எண்ணெய், நிலக்கரி போன்றவற்றை வெளி நாடுகளிலிருந்து இந்தியா இறக்குமதி செய்கிறது. இத்திட்டத்தினால் உள் நாட்டிலோயே இயற்கை எரிவாயுவை உற்பத்தி செய்ய முடியும் என்பதால் இத் திட்டத்தில் நடுவண் அரசு பிடிவாதமாக இருக்கின்றது. அதேசமயம் இத்திட்டத்தை செயல்படுத்தினால் காவிரி டெல்டா பாசனப் பகுதி நில வளமே அழிந்து பாழ்படும் என்பது தமிழக விவசயிகளின் கவலையாக உள்ளது.




இத்திட்டத்தினால் பல நன்மைகள் கிடைத்தாலும், விவசாய நிலங்கள் அழிக்கப்படும் என்பதால் இத்திட்டத்தை எதிர்த்து விவசாயிகள், பொதுமக்கள் மாணவர்கள் என அனைவரும் ஒன்று திரண்டு போராடி வருகின்றனர். நமது உரிமைகள் பறிபோகவில்லை பறிகொடுத்து கொண்டிருக்கிறோம். ஆகவே நமது உரிமைகளை மீட்டெடுக்க அனைவரும் இணைந்து வென்றெடுப்பதுதான் தலையாய கடைமை.

**இணையாசிரியர்**

# உள்ளுறை

கவிதைகள்................................ 04 - 10

விடுகதைகள்...............................11 - 12

மருத்துவக் குறிப்புகள்..............13 - 14

பொது அறிவு...............................14 - 26

கட்டுரை..........................................26 - 29

நிறுவனர் தினக் கட்டுரை.........29 - 32

# கவிதைகள்

## நட்பு

ஆழ்கடலில் இருப்பது உப்பு
ஆழ்ந்த மனதில் இருப்பது நட்பு...
தண்ணீரில் கரைவது உப்பு
நம் கண்ணிரில் கரைவது நட்பு
உப்பு உடனே கரைந்து விடும்
நட்பு கரைவது கிடையாது
உப்பு சுவை மட்டும் தான் தரும்
நட்பு அன்பையும் பாசத்தையும் தரும்
உலகில் வானம் பெரியது தான் ஆனால்
அதை விட பெரியது நட்பு...

**அ. கோகிலா**
**முதலாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

Cool...ன்னா ஏசி
Exam...ன்னா யோசி
Book...ன்னா வாசி
Love...ன்னா நேசி
நம்ம நட்புக்கு முன்னாடி
இதெல்லாம் தூசி..

கவிதை என்பது
காயம்பட்ட இதயத்திற்கு
மருந்து...
காதல் என்பது காயப்படப்போகிற

இதயத்திற்கு விருந்து...
நட்பு மட்டும் தான்
என்னென்றைக்கும்
இனிக்கும் கரும்பு...

காதல் என்பது வானவில் போன்றது
எந்த நேரத்திலும் மறைந்து போகும்
ஆனால்
நம் நட்பு வானம் போன்றது
எப்போதும் மறையாதது...
காலங்கள் கடந்து போகலாம்
உறவுகள் மறைந்து போகலாம்
மலர்கள் உதிர்ந்து போகலாம்
ஏன் காட்சிகள் கூட மாறிப்போகலாம்
ஆனால் இறுதிவரை காலங்கடந்து
நம்முடன் வருவது நட்பு மட்டுமே...

**மு. தேவராஜ்**
**முதலாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

கண்ணீர் கண்கள்
மூக்கு சளி சிந்திய
பாவாடையோடு பார்த்தேன்
என் பவளக்கொடியை...!
முதலாம் இருக்கையில்
நான் இருக்க கடைசியில் இருந்த
என் தோழியே...!
நீ என் உயிரானாய்...!
பலவித தோழிகள் என்பக்கம் இருக்கையில்
என் மனம் ஏதோ தயங்கியது...! அடிச் செல்லமே...!

என்பக்கம் நீ வந்தால்
என் உலகமே நிறைந்ததடி...!
எப்படி பார்த்தோம்
எப்படிப் பழகினோம்
என்பது தெரியலடி
ஆனால்
நீ என்னில் பாதியானது மட்டும் புலனாகுதடி...!
என் கண்களில் கண்ணீர் துளி வருகையில்
உன் கண்கள் நனைந்ததடி...!
காலம் போகும் போக்கில்
நீ
என்னை விட்டுப்
பிரிவாய் என பயந்து தவித்தேன்...!
அள்ளி அணைச்சு நீ சொன்னாய்
நீ இருக்கும் இடம் நரகமென்றாலும் ஆனந்தம்...!
என்றாயே என் தாயே...
உன்னைப்பற்றி எழுதையில்
பேனா மையும் கலங்குதடி...! என் கண்ணுடன் சேர்ந்து...

**இரா. காவியா**
**இரண்டாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

உண்மையான காதல்
கடவுள் போல,
யாரும் பார்த்ததே இல்லை
ஆனால்
உண்மையான நட்பு
தாயின் கருவைப் போல
பார்க்காதவர்கள் யாரும் இல்லை

நட்பு என்பது தேன் கூடு

அதைப் பிரிக்க நினைப்பது பெரும்பாடு

பிரிவு என்பது கூடாது

பிரித்தால் நண்பனின் மனம் தாங்காது

**க நவீன்குமார்**

**முதலாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

.

முதல் வயதில் நீ
அறிந்த மூன்றெழுத்து அம்மா....
பருவ வயதில் நீ
அறிந்த மூன்றெழுத்து அன்பு....
குடும்ப வயதில் நீ
அறிந்த மூன்றெழுத்து மனைவி
சாகும் வரை நீ
அறிந்த அழியாத ஒரே எழுத்து நட்பு...

**எஸ். வினிதா**

**முதலாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

நான் சோர்வுற்ற போது
என்னைத் தாங்கிக் கொண்டாய்
நான் உரிமையோடு சாய்ந்து கொள்ள
தோள் கொடுத்தாய்...
நான் இலைப்பாறத் தேடிய போது
உன் மடி கொடுத்தாய்....
நான் துவண்டு போன
தருணங்களில் என்னைத் தூக்கி நிறுத்தினாய்...
வலிகள் உனக்கு ஆயிரம் தந்த போதும்

தாயாய் நின்று என்னைத் தாங்கிக் கொண்டாய்...
உன் நட்பு மணிக்கம் போன்றது ; பரிசுத்தமானது;
ஆனால் உன்னுடன் பேசும் போது
என் பெற்றோருடன் பேசிக் கொள்வதாய்
உணர்கின்றேன்...
உன்னுடன் பேசும் பொழுது
எல்லையற்ற இன்பம் பெறுகிறேன்...
மறுக்காமல் பேசிவிடு
உயிர் பிரியும் கடைசி நிமிடம் வரை
உன் நட்பு எனக்கு வேண்டும்...

**கோ. தமிழ்ச்செல்வி**
**முதலாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

பெற்றோர் சூட்டிய
பெயரை மறுத்து
நமக்குள் பெயரிட்டு மகிழ்ந்தோம்
பள்ளிச் சீருடையில்
பட்டம் பூச்சியாய்
பறந்து திரிந்தோம்
கஷ்டங்கள் எவ்வளவு இருந்தாலும்
கவலைகள் இல்லை
நம் நட்பில்...
கை கோர்த்துத் திரிந்தோம்
வெட்டிக்கதை பேசினோம்
துணிச்சலாய் போராடினோம்
ஆர்பரித்துப் படித்தோம்
அமைதியாய் வாழ்ந்தோம்
இறுதியில்
கண்ணீராய் கரைந்தோம்

அத்தனையும் கண்டுவிட்டோம்
இருந்தாலும் இன்னும் தொடர்கிறது
நம் பழங்கால நட்பு...
என்னைவிட நல்ல நண்பனை
நீ கண்டுபிடித்தால் பிரிந்து போ...
உன்னைத் தடுக்க மாட்டேன்...
ஆனால் அவன்
உன்னைப் பிரிந்து சென்றால் திரும்பிப்பார்
அப்போதும் உனக்காகக் காத்திருப்பேன்
அதே நட்போடு...
சாகும் வரை பிறருக்குச்
செருப்பாக இருப்பதை விட
வாழும்போது ஒரு நண்பனுக்கு
ஏணியாக இருக்கலாம்

**ஈ. தாரணி**

**முதலாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

மின்சாரம் போல் பாய்ந்து வருவது மனிதநேயம்
தண்ணீர் போல் பாய்ந்து வருவது அன்பு
கண்ணீர் போல் வழிந்து வருவது கருணை
கண் இமை போல் பாதுகாத்து வருவது நட்பு

நண்பன் இல்லாத இடம்
சொர்க்கமாக இருந்தாலும் நரகம் தான்
ஆனால்
நண்பன் இருக்கும் இடம்
நரகமாக இருந்தாலும் சொர்க்கம் தான்

**ரா.மேகனஜோதி**

**முதலாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

Best stand is understand

Best age is college

Best work is hard work

Best day is today

Best end is friend

**செ. கவிப்பிரியா**

**முதலாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

அன்பு என்னும் அகல் விளக்கில்
பண்பு என்னும் திரிப்போட்டு
பாசம் என்னும் நெய் ஊற்றி
என் மனதில் என்றும்
சுடராய் எரியும்
என் அன்புக்குரியவள்
என் தோழி...

**சி. சூர்யா**

**முதலாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

வாட்டர்னா குடி
ஸ்கூல்னா படி
காலேஜ்னா கட்டடி
உனக்கு ஏதாவது ஒரு
பிரச்சனைன்னா உன்
நண்பனுக்கு போன் அடி

**ர. பத்மாவதி**

**முதலாமாண்டு - இளநிலை ஆடை வடிவமைப்பு மற்றும் துகிலியல் துறை**

# விடுகதைகள்

- சின்னத்தம்பிக்குத் தொட்டியே வினை அது என்ன?
  விடை: தீக்குச்சி
- தலை மட்டும் கொண்ட சிறகில்லாத பறவை அது தேசமெல்லாம் சுத்தும் அது என்ன?
  விடை: தபால் தலை
- உலகமெக்கும் படுக்கை விரித்தும் உறக்காமல் அலைகிறாவன் யார்?
  விடை: கடல் அலை
- காற்று வீசும் குட்டி மரம் அது என்ன?
  விடை: சாமரம்
- கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும் தான் அது என்ன?
  விடை: வெங்காயம்
- எப்போதும் காதையே கடித்துக் கொண்டிருப்பவன் அவன் யார்?
  விடை: அலைபேசி
- குதிரை ஓட ஓட அதன் வால் குறைந்து கொண்டே போகும் அது என்ன?
  விடை: ஊசிநூல்
- கருப்பாய் இருந்தாலும் சுவைப்பாய் இருப்பேன் நான் யார்?
  விடை: நாவல் பழம்
- குடிக்க உதவாது குளத்தில் தங்காது கைகளால் தொடாத நீர் கண்களுக்கு மட்டும் விருந்தாகும் அது என்ன?
  விடை: கானல் நீர்
- பல் இருப்பவன் கடிக்க மாட்டான் பல் இல்லாதவன் கடிப்பான்?
  விடை: சீப்பு, செருப்பு

**இரா. தீபா**

**முதலாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

- பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன?
  விடை: கிளி
- தலையில் குட்டினால் தான் சென்று சேரவேண்டிய இடத்திற்குப் போவான் அவன் யார்?
  விடை: தபால் தலை
- தொட்டால் பிடித்துக் கொள்ளும் பச்சையும் அல்ல விளக்கு எரிக்கும் எண்ணெயும் அல்ல அது என்ன?
  விடை: மின்சாரம்
- அழகான சிட்டுக்குருவிக்கு எட்டு முழம் சித்தாடை அது என்ன?
  விடை: வெங்காயம்
- மண்ணுக்குள்ளே வெள்ளை மீன் அது என்ன?
  விடை: முள்ளங்கி
- அரைசாண் ராணியின் வயிற்றில் ஆயிரம் முத்துக்கள் அது என்ன?
  விடை: வெண்டைக்காய்
- நிலையில்லா வெள்ளலைகள் நிலையாக இருக்காது?
  விடை: மேகம்
- நோயில்லை நொடியில்லை தினமும் மெலிகிறேன் நான் யார்?
  விடை: தினசரி நாள்காட்டி
- பச்சை அக்கா சிவப்பு தங்கை வாய்க்குள் போனா கதற அடிச்சிடுவாங்க?
  விடை: பச்சை, சிகப்பு மிளகாய்
- காட்டிலும் வயலிலும் பட்டுக் கடை வைக்கிறாள் செல்லம்மா?
  விடை: மயில்

**மா. தினேஷ்**

**முதலமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

# மருத்துவக் குறிப்புகள்

## பலாப்பழம்

- முக்கனிகளில் இரண்டாவது கனியான பலா அனைவராலும் விரும்பி உண்ணப்படுகிறது. இது உடல் உஷ்ணத்தைக் குறைத்து பித்த மயக்கம் கிறுகிறுப்பு ஆகியவற்றையும் குணமாக்கும்.
- பலாப் பழத்தை தேனில் நனைத்து உட்கொண்டு வர மூளை நரம்புகள் வலுப்பெறும் வாதநோய் பைத்தியம் போன்றவை நீங்கும்.
- பலா பிஞ்சினை அதிகமாய் உண்பதால் செரியாமை வயிற்றுவலி போன்றவை ஏற்படுவதுடன் சொறி, சிரங்கு, கரப்பான். கோழைக்கட்டு, இருமல், இரைப்பு, வாதநோய்கள் ஏற்படும்.
- பாலப் பழத்தை அதிகமாக உண்டால் வயிறு மந்தமாகி வயிற்று வலியையும் வாந்தியையும் உண்டாக்கும்.

**கோ. கோகிலா**

**மூன்றாமாண்டு - இளங்கலைத் தமிழ்லிலக்கியம்**

## அம்மை நோயிற்கான மருந்து

இயற்கையின் சீற்றங்களுக்கு பெரும்பாலும் இயற்கையிலேயே தீர்வு இருக்கும் என்பதற்கு சான்று. கோடையில் விளையும் வேப்பம் பூ. வேப்பம் பூவைக் காய வைத்து இரசம் வைத்து கோடைக்காலத்தில் வாரத்திற்கு 3 முறை சாப்பிட்டால் அம்மை நோய் வராது.

இனிப்புச் சுவையுடன் இருக்கும் அதிமதுர வேரைப் பொடி செய்து காலையும் மாலையும் கோடையில் சாப்பிட்டால் வீட்டில் ஒருவருக்கு அம்மை நோய் இருந்தால் மற்றவருக்கு பரவாமல் இருக்கும். மேலும் உடலின் சூடு குறைந்து, பித்தமும் தணியும். இந்த இனிப்பு சுவையுடைய அதிமதுர வேர் இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் கிடைக்கிறது.

**முருங்கையும் மூலிகையே**

காய்ந்து போன முருங்கைக் காயின் உலர்ந்த விதைக்குள் உள்ள பருப்பு ரத்தக் கொதிப்பு வராமல் காக்கும். கண் பார்வைக்கு மிக முக்கியமான கரோட்டின்களின் அளவு கேரட்டுகளை விட முருங்கை இலையில் அதிகம் உள்ளது.

முருங்கையில் வாழைப்பழத்தை விட அதிகப் பொட்டாசிய சத்தும், முட்டைக்கு இணையான புரதச் சத்தும் உள்ளது. மேலும், பாலை விட நான்கு மடங்கு கால்சியம் முருங்கையில் உள்ளது. முருங்கையில் ஆரஞ்சை விட வைட்டமின் சி-யும, மற்ற கீரையை விட அதிக இரும்புச் சத்து முருங்கைக் கீரையில் உள்ளது. முருங்கைக் கீரையை சாப்பிடுவதன் மூலம் சர்க்கரை நோயால் ஏற்படும் சோர்வு நீங்கும்.

**சீ.மோகனப்பிரியா**

**முதலாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

## பொது அறிவு

- சிந்துவெளி நாகரீகம் எத்தனை ஆண்டுகள் பழமையானது?
  விடை : 5000 ஆண்டுகள்
- 1857-ஆம் ஆண்டு புரட்சியில் ஈடுபடாத பெரும் பகுதி எது?

விடை : தென்னிந்தியா

- பாறைச் சரிவு பல்லத்தாக்கு அமைந்துள மாவட்டம் எது?
  விடை : நீலகிரி
- தீண்டாமை ஒழிப்பு கடைபிடிக்கப்படும் நாள் எது ?
  விடை : ஜனவரி 30
- தமிழகத்தில் மக்கள் தொகையில் முதலிடம் பெறும் மாவட்டம் எது?
  விடை : கோவை
- இந்து திருமனச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு எது?
  விடை : 1955
- ஆகஸ்ட் 15 இந்தியாவுடன் சுதந்திரமடைந்த மற்றொரு நாடு எது?
  விடை : கென்யா
- 2007-2008 இந்தியாவின் மொத்த உணவு உற்பத்தி என்ன?
  விடை : 227.32 மில்லியன் டன்
- தமிழகத்தில் பருத்தி ஆராய்ச்சி நிலையம் உள்ள இடம் எது?
  விடை : திருவில்லிப்புத்தூர்
- தமிழகத்தின் முதல் வானொலி நிலையம் அமைந்த இடம் எங்கு உள்ளது?
  விடை : சென்னை
- முதல் உலகப்போர் எந்த ஆண்டு தொடக்கியது?
  விடை : 1914
- உலகிலேயே மிகப்பெரிய அஞ்சல் துறை உள்ள நாடு எது?
  விடை : இந்தியா
- தமிழகத்தில் முதன் முதலில் மதுவிலக்கு அமல் செய்யப்பட்ட மாவட்டம் எது?
  விடை : சேலம்

- வைரங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ள இடம் எது?

  விடை : பன்னா

**ம. ஹேமலதா**

**முதலாமாண்டு -இளங்கலைத் தமிழிலக்கியம்**

- மனித உடலில் காணப்படும் சுரப்பிகளில் மிகப்பெரியது எது?

  விடை : கல்லீரல

- இதயத்தைச் சுற்றியுள்ள உறை எது?

  விடை : பெரிகார்டியம்

- மனித மூளையின் எடை எவ்வளவு?

  விடை : 1.36 கி.கி

- மிக விரிவான இறக்கையுடைய பறைவை எது?

  விடை : ஆல்பட்ராஸ்

- மிக வேகமாக நீந்தும் பறவை எது?

  விடை : ஜெண்டு பெங்குவின்

- வான்கோழிகள் எங்கிருந்து வந்தன?

  விடை : அமெரிக்கா

- உலகத்தின் கூரை என்றழைக்கப்படுவது எது?

  விடை : பாமீர்

- பொன்தோல் போர்த்த பூமி என்றழைக்கப்படுவது எது?

  விடை : ஆஸ்திரேலியா

- பண்டிய ஆசிரியர்களின் மொழி யாது?

  விடை : சமஸ்கிருதம்

- அதிக அளவு இருப்பு படிகள் உள்ள மாநிலம் எது?

  விடை : பீகார்

- தமிழகத்தின் பெரும்பாலான ஆறுகள் பாயும் திசை?

  விடை : கிழக்கு

- இந்தியாவில் எந்தாண்டு முதல் இருப்புபாதை அமைக்கப்பட்டது?

  விடை : 1853

- கோடைக்கால உறக்கம் கொள்ளும் உயிரி?

  விடை : தவளை

- நதியே இல்லாத நாடு எது?

  விடை : ஈரான்

- விதவைகள் மாறுமணச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு?

  விடை : 1856

**வ. பாரதி**
**முதலாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

- இந்தியாவில் எப்போது வருமானவரி பழக்கத்திற்கு வந்தது?

  விடை : 23.07.1860

- வயலின் இசைக்கருவி எங்குத் தோன்றியது?

  விடை : இந்தியாவில்

- உலகின் முதல் வங்கி எங்கு ஆரம்பிக்கப்பட்டது?

  விடை : வெனிஸ் நகரில்

- முதல் இந்திய தேசிய வரைபடம் எப்போது வெளியிடப்பட்டது?

  விடை : 1752

- இரும்பை விடக் கடினமான வாயு எது?

  விடை : ராடான்

- உலகில் அதிகப் பரப்பளவு உள்ள நகரம் எது?

  விடை : லண்டன்

- இந்தியன் காடுகளின் ராஜா எனப்படுவது யாது?

  விடை : தேக்குமரம்

- உலகின் மிகப்பெரிய வங்கி எது?

  விடை : பாங்க் ஆப் அமெரிக்க

- மனித உடம்பிலுள்ள எலும்புகளின் எடை எவ்வளவு?

விடை : 9 கிலோ கிராம்

- சீன நாட்டில் துக்கத்தைக் குறிக்கும் நிறம் எது?

  விடை : வெள்ளை

- ஆசியா என்பதன் பொருள் என்ன?

  விடை : சூரியோதயபூமி

**சு. விஜயா**

**முதலாமாண்டு - இளங்கலைத்தமிழிலக்கியம்**

- சூழ்நிலையியல் என்னும் பதத்தைக் கூறியவர்?

  விடை : டான்ஸ்லி

- டைகா என்பது என்ன?

  விடை : பயன்படுத்தப்படாத காடுகள்

- கடல் நீரோட்டங்கள் நெருங்கும் பகுதி எது?

  விடை : நடு அட்சரேகைப் பகுதிகள்

- குனில் அகழி அமைந்துள்ள இட்ம் எது?

  விடை : வடமேற்கு பசுபிக் சமுத்திரம்

- மிக அதிக உவர்ப்பியம் உள்ள இடம் எது?

  விடை : வான் ஏரி

- தாக் எனப்படுவது என்ன?

  விடை : குதிரைகளுக்கு முத்திரையிடுதல்

- குபுலியாத எனப்படுவது எது?

  விடை : ஓர் ஒப்பந்தம்

- உலகின் மிகப்பெரிய கண்டம் எது?

  விடை : ஆசியா

- வட அமெரிக்காவின் மிக நீண்ட ஆறு எது?

  விடை : மிசிசிபி

- பால் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?

  விடை : இந்தியா

சு. விஜயா

முதலாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்

- தி டாவின்சி கோட் என்ற நூலின் ஆசிரியர் யார்?
  விடை : டான் ப்ரௌன்
- ஜார்ஜ் டபள்யூ பூஷ் என்ற பெயரின் டபள்யூ என்பதைக் குறிக்கும் சொல் என்ன?
  விடை : வாக்கர்
- உலக உணவு தினம் அனுசரிக்கப்படும் நாள் எது?
  விடை : அக்டோபர் 16
- மத்திய பண்டைய காப்பகக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
  விடை : 1957
- வங்கியர் எதை உற்பத்தி செய்பவர் என்று கூறப்படுகிறது?
  விடை : பணம்
- நிகர நாட்டு உற்பத்தி பொதுவாக எவ்வாறு அழைக்கப்படுகிறது?
  விடை : நாட்டு வருமானம்
- கற்சுரங்கத் தொழில் எந்தத் துறையில் இடம் பெறுகிறது?
  விடை : முதன்மைத்துறை
- வேலைப் பகுப்பு முறையை அறிமுகப்படுத்தியவர் யார்?
  விடை : ஆல்ஃபிரடு மார்ஷல்
- குடியரசு என்ற நூலின் ஆசிரியர் யார்?
  விடை : பிளேட்டோ
- பாசிக் கொள்கையின் தீவிர ஆதரவாளர் யார்?
  விடை : முசோலினி

க. ரஞ்சூரியா

முதலாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்

- உலகிலேயே மிக உயரமான விமான நிலையம் எது?

விடை : லாசா விமான நிலையம், திபெத்

- உலகிலேயே மிக உயரமான கலங்கரை விலக்கம் எது?

  விடை : ஸ்டீல் டவர், யோக்க ஹாமா-ஜப்பான்

- உலகிலேயே மிக உயரமான சிலை எது?

  விடை : தாய்நாடு, மமயேன் மலை - ரஷியா

- உலகிலேயே மிக உயரமான அணை எது?

  விடை : கிராண்ட் டிக்கென்சி, ஸ்விட்சர்லாந்து

- உலகிலேயே மிக உயரமான ஏரி எது?

  விடை : லேகோ டிட்டிக்காசா

- உலகிலேயே மிக உயரமான மலைத்தொடர் எது?

  விடை : இமாலயம்

- உலகிலேயே மிக உயரமான அருவி எது?

  விடை : ஏஞ்சல் அருவி, வெனிசுளா

- உலகிலேயே மிக உயரமான ஓட்டல் எது?

  விடை : வெஸ்டின் ஸ்டாம் போர்டு ஓட்டல்

- உலகிலேயே மிக ஆழமான ஏரி எது?

  விடை : பைக்கால், சைபீரியா

- உலகிலேயே மிக உயரமான பாலம் எது?

  விடை : ஜார்ஜ் பாலம்

**இ. கோகுலக் கண்ணன்**
**முதலாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

- நேரடி மக்களாட்சி முறை பின்பற்றப்படும் நாடு?

  விடை : சுவிட்சர்லாந்து

- கரிசல் மண்ணில் குறைவாகக் காணப்படும் சத்து எது?

  விடை : நைட்ரஜன்

- தென்னாப்பிக்க அரசு காந்திக்கு அளித்த பட்டம் எது?

  விடை : கெய்சர் இஹிந்த்

- உலக தண்ணீர் தினம் அனுசரிக்கப்படும் நாள் எது?
  விடை : மார்ச் 22
- உலக வங்கி செயல்படத் தொடங்கிய ஆண்டு எது?
  விடை : 1945
- போதைப்பொருள் எதிர்ப்பு தினம் அனுசரிக்கப்படும் நாள் எது?
  விடை : ஜீன்26
- மது அருந்துவதால் பாதிக்கப்படும் மனிதனின் உறுப்பு எது?
  விடை : சிறுமூளை
- கடல் நீரோட்டங்கள் நெருங்கும் பகுதி எது?
  விடை : நடு அட்சரேகைப்பகுதிகள்
- உலகிலேயே அதிகளவு அணுசக்தியை உற்பத்தி செய்யும் நாடு எது?
  விடை : அமெரிக்க
- வாகனம் செல்லும் வேகத்தை அலவிடும் கருவி எது?
  விடை : வேகமானி
- புற்றுநோய் சிகிச்சைக்கு எந்த தாவரத்திலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது?
  விடை : நித்தியக்கல்யாணி
- ரத்த சோகை நோய் எந்த வைட்டமின் குறைவினால் மனிதர்களுக்கு உண்டாகிறது?
  விடை : வைட்டமின் பி-12
- நுகர்வோர் இயக்கத்தின் தந்தை எனப்படுபவர் யார்?
  விடை : நால்ஃநாடர்
- ரத்தம் உறைதலுக்குத் தேவையான வைட்டமின் எது?
  விடை : வைட்டமின் கே

**ப. சசி**

**முதலாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

- குள்ளமான மனிதர்களை உருவாக்கும் சுரப்பி எது?

  விடை : பிட்யூட்டரி

- மலட்டுத்தன்மையைப் போக்குவதாகக் கருதப்படும் பழம் எது?

  விடை : துரியன் பழம்

- மனிதன் பயன்படுத்திய முதல் காய்கறி எது?

  விடை : முட்டைக்கோஸ்

- பல் இல்லாத பிராணி எது?

  விடை : ஆண்ட் ஈடர்

- பறக்கத் தெரியாத பறவை எது?

  விடை : பென்குயின்

- பறவைகளில் மிகவும் சிறியது எது?

  விடை : ஹம்மிங் பறவை

- பெரிய கடல் பறவை எது?

  விடை : அல்ப்ட்ராஸ்

**சி. ஐஸ்வர்யா**

**இரண்டாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

## இந்தியா - சிறப்பிடங்கள்

- இந்தியாவி கோதுமை களஞ்சியம் எது?

  விடை : பஞ்சாப்

- இந்தியாவில் அதிக நூலகங்கள் உள்ள மாநிலம் எது?

  விடை : கேரளா

- இந்தியாவில் உப்பு அதிகம் தயாரிக்கும் மாரிலம் எது?

  விடை : குஜராத்

- இந்தியாவில் மக்கள் தொகை அதிகம் உள்ள மாநிலம் எது?

  விடை : உத்தரப்பிரதேசம்

- இந்தியாவின் வைரச்சுரங்கம் எங்குள்ளது?

விடை : பன்னா

- சனல் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மாநிலம் எது?
  விடை : மேற்கு வங்கம்
- இந்தியாவில் ரயில் பாதைகளே இல்லாத மாநிலம் எது?
  விடை : மணிப்பூர்
- இந்தியாவில் விமானத் தொழிற்சாலை உள்ள இடம் எது?
  விடை : பெங்களூர்
- இந்தியாவின் அணிகலன் என்றழைக்கப்படும் மாநிலம் எது?
  விடை : மணிப்பூர்
- நிலப்பரப்பில் மிகக் குறைந்த இந்திய மாநிலம் எது?
  விடை : கோவா

**செ. சரண்யா**
**இரண்டாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்**

- இந்தியாவின் மொத்தப் பரப்பளவு
  விடை : 32,87,203 சதுர கி.மீ
- இந்தியாவின் தேசிய சின்னம்
  விடை : அசோகச் சக்கரம்
- இந்தியாவின் தேசிய கீதம்
  விடை : ஜனகனமன
- இந்தியாவின் தேசியப்பாடல்
  விடை : வந்தே மாதரம்
- இந்தியாவின் தேசிய விலங்கு
  விடை : புலி
- இந்தியாவின் தேசியப் பறவை
  விடை : மயில்
- இந்தியாவின் தேசிய மலர்
  விடை : தாமரை

- இந்தியாவின் தேசிய மொழி

  விடை : இந்தி

- இந்தியாவின் தேசிய விளையாட்டு

  விடை : ஹாக்கி

- இந்தியாவின் தேசிய மரம்

  விடை : ஆலமரம்

- இந்தியாவின் தேசியப் பழம்

  விடை : மாம்பழம்

- இந்தியாவின் தேசிய சுலோகம்

  விடை : சத்ய மேவ ஜயதே

- இந்தியாவில் உள்ள மொத்த மொழிகளின் எண்ணிக்கை யாது?

  விடை : 1652

- இந்தியாவின் பெரிய துறைமுகம் எது?

  விடை : கல்கத்தா துறைமுகம்

- இந்தியாவின் முதல் தரைப்படைத் தளபதி யார்?

  விடை : ஜெனரல் கரியப்பா

- இந்தியாவின் கடைசி மொகலாய மன்னர் யார்?

  விடை : பகதூர்ஷா

- எவரெஸ் சிகரத்தை அடைந்த முதல் இந்தியப் பெண் யார்?

  விடை : பச்சேந்ததிபால்

- இந்தியாவின் மிக உயர்ந்த மலைச்சிகரம் எது?

  விடை : நந்தி தேவி

- இந்தியாவின் நீளமான நதி?

  விடை : பிரம்மபுத்திரா

- இந்தியக் கப்பல் தொழிர்சாலை அமைந்துள்ள இடம் எது?

  விடை : விசாகபட்டினம்

- இந்தியாவின் இரயில் பெட்டித் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?

  விடை : பெரம்பலூர்

- இந்தியாவின் மிகப்பெரிய மிருகக்காட்சி சாலை எங்குள்ளது?

  விடை : அலிப்பூரில்

- இந்தியாவின் மிக நீளமான பாலம் எது?

  விடை : மகாத்மா காந்தி பாலம்

- இந்தியாவின் மிக உயரிய இலக்கிய விருது யாது?

  விடை : ஞானபீட விருது

- இந்திய வின்வெளி ஆய்வகம் எங்குள்ளது?

  விடை : பெங்களூர்

- இந்தியாவின் மிக உயர்ந்த அணை?

  விடை : பக்ராநங்கல்

- இந்தியாவின் பெரிய குகைக்கோயில் எங்குள்ளது?

  விடை : எல்லோரா

- இந்தியாவின் நீளமான அணை எது?

  விடை : ஹிராகுட்

- இந்தியாவில் உள்ள இரயில் நிலையங்களின் எண்ணிக்கை?

  விடை : 7080 க்கும் மேற்பட்டவை

- இந்திய வரைபடத்தை வரைந்தவர் யார்?

  விடை : டா. ஆன்லின்

- இந்தியாவின் அணு விஞ்ஞானத் தந்தை யார்?

  விடை : ஜஹாங்கீர் ஹோமிபாபா

- இந்தியாவின் முதல் பத்திரிகை யாது?

  விடை : பெங்கால் கெசட்

- இந்தியப் பெருங்கடலிலுள்ள மிகப்பெரிய தீவு?

விடை : மடகாஸ்கர்

- டிராம் வண்டி ஓடிய முதல் இந்திய நகரம் என்ன?

  விடை : கல்கத்தா
- இந்தியாவின் தொலைக்காட்சி சேவை தொடக்கப்பட்ட ஆண்டு?

  விடை : 1969
- இந்திய மறுமலர்ச்சியின் தந்தை என்றழைக்கப்படுபவர் யார்?

  விடை : ராஜாராம் மோகன்ராய்
- இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சர் யார்?

  விடை : சுதேசா கிருபளானி
- இந்தியாவின் முதல் பெண் மேயர் யார்?

  விடை : தாராசெரியர்
- இந்தியாவில் நுழைந்த முதல் ஐரோபியர் யார்?

  விடை : அலெக்சாண்டர்
- இந்திய தேசிய வழித்தடங்களின் நீளம்?

  விடை : 34000 கி.மீ
- இந்தியாவில் வெளியான முதல் நூல் என்ன?

  விடை : வேதோபதேசம்
- இந்தியாவில் விமானங்கள் தயாரிக்கப்படும் இடம் எது?

  விடை : கோராபுட்

## கட்டுரைகள்

### ஹிட்டலரின் வரலாறு

இரண்டாம் உலகப்போரின் கதாநாயகனும் வில்லனும் ஒருவரே. அவர்தாம் ஹிட்லர். அவர் பெயரைக் கேட்டாலே உலகம் நடுங்கியது. இரண்டாம் உலப்போர் மூள்வதற்கும், அதன் மூலம் 5 கோடி பேருக்கு மேல் சாவதற்கும் காரணமாக இருந்த ஹிட்லரின் வாழ்க்கை பல திருப்பங்களும் திடுக்கிடும் சம்பவங்களும் நிறைந்தது.

வட ஆஸ்திரியாவில் உள்ள பிராணவ் என்ற ஊரில் 1889-ஆம் ஆண்டு ஏப்ரல் 20-ஆம் தேதி பிறந்தவர் ஹிட்லர். இவருடைய தந்தையின் பெயர் அலாய்ஸ் ஷிக்கிள் கிரப்பர் ஹிட்லர். இவர் சுங்க இலாக அதிகாரியாக வேலைபார்த்து வந்தார். இவருக்கு மூன்று மனைவிகள். மூன்றாவது மனைவியாக கிளாராவின் நான்காவது மகனாக பிறந்தார் ஹிட்லர்.

பிறந்தது முதலே ஹிட்லர் நோஞ்சானாக இருந்தார். அடிக்கடி காய்ச்சல் வரும் ஹிட்லருக்கு அம்மாவிடம் செல்லம் அதிகம். தாய் மீது மிகுந்த பக்தியும் பாசமும் கொண்டவர் ஹிட்லர். பள்ளியில்படிக்கும் போது ஹிட்லர் தான் முதல் மாணவர்.

ஹிட்லரை அரசுப்பணியில் சேர்க்க ஆசைப்பட்டார் அலோய்ஸ். ஆனால் ஹிட்லரின் விருப்பமோ தான் ஒரு ஓவியார் ஆக வேண்டும் என்பதுதான். ஹிட்லர் படிப்பில் ஆர்வம் குறைந்தது. வரைகலையில் ஆர்வம் ஏற்பட்டது.

1903-ஆம் ஆண்டு ஹிட்லரின் தந்தை இறந்து போகிறார். தனது 17-ஆவது வயதில் பள்ளி இறுதித் தேர்வில் தேறினார். அதற்காக கொடுத்த சான்றிதழை வாங்கிக் கொண்டு வரும் வழியில் நண்பர்களுடன் மது அருந்தி சான்றிதழைக் கிழித்தெறிந்தார்.

ஈவா பிரவுன் என்ற பெண் 1930-ஆம் ஆண்டு முதல் ஹிட்லருடைய மனம் கவர்ந்த காதலியாக இருந்து வந்தார். ஈவா பிராணும், ஹிட்லரை உயிருக்கு உயிராக நேசித்தாள். அதனால் மனைவி என்ற அந்தஸ்த்து கிடைக்காவிட்டாலும் ஹிட்லருடன் சேர்ந்து வாழ்ந்து வந்தாள்.

**ச. தமிழ்ச்செல்வன்**

**முதலாமாண்டு - துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத் துறை**

## சே.கு.வேரா வாழ்க்கை வரலாறு

கியூபா வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட மாவீரன் 1928-ஆம் ஆண்டு ஜீன் மாதம் 1-ஆம் நாள் ஆர்ஜெண்டீனாவில் உள்ள ரொசாரியோ என்னும் இடத்தில் ஏர்னெஸ்டோ குவேரா லன்ஞ், சிசிலியா டெலசெர்னா தம்பதியர்க்கு முதல் மகனாகப் பிறந்தவர். அவர்கள் தங்களுக்குப் பிறந்த தலைப்பிள்ளையை முத்தமிட்டு மகிழ்ந்தனர். அளவற்ற மகிழ்ச்சிக்கு அடையாளமாகத் தங்களுக்கு பெயர்களின் பாதியை இணைத்து ஏர்னெஸ்டோ குவேரா டிலசெர்னா எனப் பெயர் சூட்டினர்.

அப்போது குவேரா தம்பதிக்கு தெரிந்திருக்கவில்லை தனது மகனுக்கு வரலாற்றில் வேறு பெயர் பதிவு செய்யப்படும் என்று. சேவிற்கு குறையற்ற விதத்தில் குழந்தை பருவம் அமைந்தது. சொர்க்கமாக மூலிகைத் தேயிலை பண்ணையிருக்குமளவு வளமானது ஏர்னெஸ்டோவின் குடும்பம்.

சே வுக்கு இரண்டு வயது இருக்கும். நீச்சல் ஈடுபாடு கொண்ட அவரது தாய் ஒரு குளிர் காலைப் பொழுது நதிக்கு தன் குழந்தையை அழைத்துச் சென்றாள். இவர் ஒரு சிறந்த ராக்பி விளையாட்டு வீரர். இவரை பூசெர் என்று பட்டப்பெயர் வைத்தும் அழைத்தனர். இவருக்கு பன்றி என்னும் பொருளுடைய சாங்கோ என்ற பட்டப்பெயரும் உண்டு. தனது தந்தையிடம் சதுரங்கம் விளையாடப்பழகிய சேகுவேரா 2-ஆவது வயதில் உள்ளூர் சுற்றுப் போட்டிகலிலும் கலந்து கொண்டுள்ளார். குவேராவின் விட்டில் 3000 நூல்களுக்கு மேல் இருக்கின்றது.

**டி. நந்தகுமார்**
**முதலாமாண்டு - துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத் துறை**

## தேசிய மாணவர் படையின் முக்கியத்துவம்

தேசிய மாணவர் படை National Cadet Corps(NCC) என்பது துணை இராணுவம் மற்றும் இரண்டாம் நிலை இராணுவம் எனப்படும்.

- போர் காலகட்டங்களில் இராணுவ வீரர்களுக்கு இரண்டாவது அடுக்காக நின்று செயல்படும் மிகப்பெரிய பொறுப்பு தேசிய மாணவர் படையினருக்கு உள்ளது.

**வேலை வாய்ப்புகள்**

- அரசு வேலை வாய்ப்புகள் அனைத்திற்கும் NCC -C- Certificate exam-ல் A Grade வாங்கினால் நுழைவுத்தேர்வுகளில் 5 மதிப்பெண் இலவசமாகக் கொடுக்கப்படும்.
- தேசிய மாணவர் படையில் C- Certificate exam- முடித்திருந்தால் இராணுவத்தில் நுழைவுத்தேர்வு என்பது கிடையாது.
- உடல் தகுதித் தேர்வு மட்டுமே நடைபெறும்
- ஐ.ஏ.எஸ் மற்றும் ஐ.பி.எஸ் தேர்வுக்கு என்.சி.சி மாணவ மாணவியருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.
- அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

**முக்கியத்துவத்தின் காரணம்**

- தேசிய மானவர் படை மாணவர்களிடம் சகிப்புத்தன்மை, ஒரு குழுவை வழிநடத்துதல், காலம் கடத்தாமை, ஒழுக்கம் என்று அனைத்து விதமான திறமைகளும் உள்ளதால் அரசு, தனியார் நிறுவனங்கள் தேசிய மாணவர் படையிலுள்ள மாணவர்களையே அதிகம் விரும்புகின்றனர்.

**மு. பிரதீப்ராஜ்**

**மூன்றாமாண்டு-இலங்கலைத்தமிழிலக்கியம்**

## கல்வியில் ஓர் கற்தூண்

விடியாத இரவுமில்லை, வடியாத வெள்ளமும் இல்லை. உளி படாத சிலையுமில்லை, பல்லவி இல்லாத பாடலும் இல்லை.

கல்லூக்குள் தேரை உயிர் வாழ்வது போல் உழைப்பின் ஊற்றாய் அருவி கண்களாக நற்பண்பின் நதியாக கல்விக் கடலாய் கல்விக் கலை கண்ட வள்ளலாக இருப்பவர் நம் தாளாளர்.

வாழ்க்கை எனும் கல்வி கடலில் நீந்தி
சோதனை எனும் பாறையைக் கடந்து வெற்றி எனும்
கரையை அடையும் வரை போராடிய மாமனிதர்
என்பதைத் தன் வாழ்விலே உணர்த்தியவர்,
தேனுக்கு விளம்பரம் மென்மை
வானுக்கு விளம்பரம் கதிர் வெளிச்சம்
வாரிக் கொடுக்கும் வள்ளலே

கல்வித்துறையில் கல்லும் உடையாமலும் சிலையும் சிதையாமலும் செதுக்கிய சிற்பமாகக் கரைபுரண்டு ஓடி வரும்காவேரி கரை ஓரம் கார்மேக கூந்தலிலே கல்வி கவிரசம் ஊற்றெடுக்க அந்தி மழை மேகமாக அக்னி சிறகாக அமாவாசை இருட்டில் தெரியாத நிலவாக தெளிந்த நீரோடையாக நீதியின் நிழல் தருமத்தின் கருவறையில் ஜனன தீபமாக சிங்காரத் தொட்டிலிலே நிழல் தேடும் நெஞ்சங்களின் நினைவு அலைகளில் நெஞ்சுக்கு நீதியாக ரத்தத்தின் ரத்தங்களாக உதயத்தின் உத்திரத்திலே வள்ளலின் வானமாக தவப்புதல்வராக கொங்கு நாட்டுத் தங்கம் பொன்மனச் செம்மலின் இதயகனியாக கல்வி ரத்னா கொடுத்து சிவந்த கரம் கல்விக்கு கண்ணாக காமதேனுவாக கொடுத்து சிவந்த கரம் கலங்கரை விளக்காக கல் ராஜாளி பறவையாக வாழ்வில் சிகரம் தொட்டு ஏழைகளுக்கு எட்டாதிருந்த கல்விக்கனியை பறிக்க ஏணியாக புவி உலகில் புதுமைக்கு வித்தாக முப்பரிமான கடலிலே கரையாத கற்பூரமாக தன் கடும் உழைப்பினால் கல்வி என்ற வாழ்க்கையைத் தூணின் நிலைக்கண்ணாடியாக ஓர் கல்தூண் வடிவம் பெற உழைப்பாளர்

உழைப்பு எவ்வளவு தேவியோ அந்த அலவிற்கு கல்வியில் புரட்சி கண்டவர் நம் தாளாளர்.

முன்னோர்கள் பதினாறு செல்வங்கள் பெற்று பெறு வாழ்வு வாழ்க என ஆசி வழக்குவர். அதேபோல் பதினாறு கல்வி நிறுவனங்களை உருவாக்கிய உழைப்பின் மாமேதை விண்ணிலே நட்சத்திரங்கள் இருப்பத்தேழு வானவில்லின் நிறமோ ஏழு ஆக முப்பத்தி நான்கு, அதேபோல் இந்த நிறுவனர் தினம் கொண்டாடப்படுகிற ஆண்டோ முப்பத்தி நான்கு. கல்வி கப்பலின் மாலுமியாக மடை திறந்த வெள்ளமாக அறிவுப் பெட்டகமாக, ஆணிவேரின் அடிநாதமாக ஆகாய பந்தலிலே அம்மி மிதித்து அருந்ததி பார்த்து அக்னி சாட்சியாக இந்தத் தாமரை தடாகத்திலே வீற்றிருக்கின்ற கொங்கு நாட்டு சாதனையாளர், தங்கத் தலைவர் நமது தாளாளர் அரிமா.டக்டர் கே.எஸ்.ரங்கசாமி அய்யா அவர்கள் நீடுழி வாழ அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் அருள் கொண்டு எல்லா வளமும் நலமும் பெற்று சிறக்க சிங்க நடையிலே சிம்மக்குரலோனாக சிரம் தாழ்த்தி வணங்குகிறேன். விதைகள் கண்ணுக்குத் தெரிவதில்லை. இலைகள்தான் விளம்பரத்தைத் தேடுகின்றன. அய்யா விதைத்து வளர்ந்த செடிகள் இன்று பெரிய ஆலவிருட்சமாக வேரூன்றி வெள்ளி அலையாக வான் மேகத்தை தாலாட்டுகிறது.

“நீங்கள் எத்தனை பெரிய உயரங்களைத் தொட்டாலும் திறமையும் ஒழுக்கமும் இல்லாமல் எந்தச் சாதனைகளும் சாத்தியமில்லை”, இதுவே அய்யாவின் தாரக மந்திரம். சங்கீதமில்லாத சத்தங்களாகச் சாகா வரம் பெற்று சரித்திரத்தில் இடம்பெற எங்கும் ஒளி வீசட்டும். இந்த உலகில் இன்றைக்கு கல்லூரிகளில் படிக்கும்போதே மாணவ மாணவிகள் தங்களை

எதிர்கால வாழ்க்கையைத் தெளிவான திட்டமிடுதலை உருவாக்கிக் கொள்ள வேண்டும். பூச்சி பறக்கும் போது பளபளக்கிறது. மனிதன் சுறுசுறுப்பாக இயங்கும் போது தான் பிரகாசிக்கிறான்.

வாழும் வரை போராடு வழி உண்டு உன் விழிகளில்
சங்கே முழங்குக உங்கள் புகழ் ஓங்கிட
வளர்ந்திட எங்கும் அழியாமல் உங்கள்
நாமம் தாங்கி வாழ்ந்திட
ஒரு அறிஞர் கல்வி என்பது ஆயுதம்
அது உலகையே மாற்றக் கூடியது வல்லமை பெற்றது

வாழ்க அய்யா நாமம்...வளர்க அவரது புகழ்

**இவண்**


**ஜெ.ஸ்ரீதர்**

**கே.எஸ்.ஆர் பொறியியல் கல்லூரி அலுவலர்**




**தமிழ்த்துறையின் விடியல் குழு சார்பாக எங்களது மனமார்ந்த நிறுவனர் தின வாழ்த்துகள் அய்யா...**

என்றென்றும் தங்களுடன் இருப்பதில் பெருமிதம் கொள்கிறோம்...









இப்படிக்கு,
சு. விஜியா
இளங்கலைத் தமிழ்
முதலாமாண்டு.


அ. கண்மணி


பெண் சிசு கொல்வதை தவிர்த்து பெண் முன்வர கைக்கொடுங்கள்